21 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும் மாணவர்களுடைய சேர்க்கைக்கு ஏற்றாற்போல் எந்தெந்தப் பகுதிகளில் தேவைப்பட்டதோ, அந்தந்தப் பகுதிகளில் வழங்கப்பட்டன. அந்த அடிப்படையில்தான் அவர் சார்ந்திருக்கக்கூடிய சேலம் மாவட்டம், வனவாசி பகுதியில் கடந்த ஆண்டு புதியதாக ஒரு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி தோற்றுவிக்கப்பட்டது. அவர் இருக்கின்ற பகுதியிலிருந்து தொலைதூரத்தில் தொழில்நுட்பக் கல்லூரி இருக்கின்றது என்கின்றார். ஆகவே, இந்தப் பகுதியில் படிக்கின்ற மாணவர்களுக்கு தொழில்நுட்பக் கல்லூரி ஏதும் இல்லையென்று அவர் கோரிக்கை வைத்திருக்கின்றார். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கெங்கவல்லி தொகுதி, கெங்கவல்லி பேரூராட்சியில் ஒரு புதிய அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி தொடங்குவது குறித்து தேவைக்கு ஏற்ப ஆராய்ந்து, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் தொடரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் பார்வைக்கு எடுத்துச் சென்று அந்தப் பகுதியில் கூடுதலாக ஒரு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி தேவையென்றால் அதனைப் பரிசீலனை செய்து, அரசு அதனை ஆய்வு செய்து, அது வருவதற்குண்டான வாய்ப்பை, முயற்சியை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 117, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

117—

கால்நடை மருத்துவமனை

***35438—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, காரமடையில் உள்ள கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2019 ஜூலை 16]

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட காரமடையில் கடந்த 1966 ஆம் ஆண்டு முதல் கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருகிறது. இம்மருந்தகம், ஓடந்துறை, காரமடை மற்றும் சிக்கராம்பாளையம் ஆகிய கிராம ஊராட்சிகள் மற்றும் 43 குக்கிராமங்களில் வளர்க்கப்படும் கால்நடைகளுக்கு மருத்துவ சேவை மற்றும் இதர சேவைகளை வழங்கி வருகிறது. இம்மருந்தகத்தில் தினசரி கால்நடைகளின் வருகை 40–க்கும் மேற்பட்டதாக உள்ளது. மேலும், இக்கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கு போதுமான இடவசதியும் உள்ளது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய காரமடை கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவதற்கு சாத்தியக்கூறுகள் உள்ளன என்பதையும் இதுகுறித்து அரசின் கொள்கை முடிவுக்கு உட்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, ஆவன செய்யப்படும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.

திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழ்கிற காலத்தில் வரலாறு படைத்து, வாழும் மனித தெய்வமாகத் திகழ்ந்து, மறைந்தும் மறையாமல் இன்றைக்கு நம் அனைவருடைய நெஞ்சங்களில் நீக்கமற வாழ்ந்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். அவர் வழியில் ஆட்சி செய்கின்ற தமிழக முதலமைச்சர், துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். எனது தொகுதிக்குட்பட்ட காரமடையில் அமைந்திருக்கின்ற கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டும் என்று கேள்வி கேட்டிருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெகு விரைவில் அந்தக் கால்நடை மருந்தகத்தை

காலநடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தி வழங்குவதாக அறிவித்திருக்கின்றார்கள். அதற்கு எனது நெஞ்சார்ந்த நன்றியை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும் தெரிவித்து, அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள்.

திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதி, பாலப்பம்பட்டி கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்கப்படுமா என்பதையும், மடத்துக்குளம் வட்டத்தில் உள்ள கால்நடை மருத்துவ நிலையம் அனைத்து வசதிகளுடன்கூடிய மருத்துவமனையாக அமைக்கப்படுமா என்றும், அதேபோல், மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதியில் கால்நடை மருத்துவக் கல்லூரி ஒன்று அமைக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகின்றேன். அதேபோன்று தமிழகத்தில் பசு மாடு வழங்கும் திட்டத்தில் வழங்குகின்ற பசுக்கள் காங்கேயம் போன்ற நாட்டு மாட்டு இனங்களாக இருக்கின்றன. வடநாடுகளில் உள்ள கிர், ஓங்கோல், ரெட் சிந்தி உள்ளிட்ட மாடுகளை வழங்கினால், நிச்சயமாக அவற்றின் பால் உடலுக்கு ஆரோக்கியமானதாக இருக்கும். ஆகவே, அந்த மாடுகள் வழங்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகின்றேன். அதேபோல் பூலாங்கிணறு கிராமத்தில் கட்டப்பட்ட கிளை நிலையத்திற்கு தொடர்ந்து குடிநீர் வசதி ஏற்பாடு செய்யப்படாமல் உள்ளது. ஆகவே அதற்கான ஏற்பாட்டினையும் செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10—45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மடத்துக்குளம் சட்டப் பேரவைத் தொகுதிக்குட்பட்ட பாலப்பம்பட்டியில் கால்நடை கிளை நிலையம் அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்

2019 ஜூலை 16]

அவர்கள் கோரியிருக்கின்றார்கள். புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்க வேண்டுமென்று சொன்னால், குறைந்தது 3000 அலகுகளுக்கு மேல் இருக்க வேண்டும். அதேபோல 3 கிலோ மீட்டருக்குமேல் கால்நடை கிளை நிலையம் அல்லது கால்நடை நிலையங்களுக்கான இடைப்பட்ட தூரம் இருக்க வேண்டும். கால்நடை கிளை நிலையம் செயல்படுவதற்கு வாடகையில்லா கட்டடம் அளிக்கப்பட வேண்டும். இதுபோன்று அனைத்து வசதிகளும் பாலப்பம்பட்டியில் இருக்குமாயின், கால்நடை கிளை நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் எடுத்துச்சொல்லி ஆவன செய்யப்படும் என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, மடத்துக்குளம் தொகுதியில், கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்றார்கள். அரசு விதிகளின்படி ஒரு கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்திட கீழ்க்கண்ட விதிமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன: கால்நடை மருத்துவமனையை நேரடியாகத் துவக்க இயலாது. கால்நடை மருந்தகம் மட்டுமே கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படும் என்பதையும், கால்நடை மருந்தகத்திற்கு தினந்தோறும் சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை 40—க்குமேல் இருக்க வேண்டும். அதேபோல, உள்நோயாளி பிரிவு, ஊடுகதிர் பிரிவு நிறுவுதல் போன்ற வசதிகள் உருவாக்குவதற்கு போதிய இடவசதி இருத்தல் வேண்டும். ஒரு கால்நடை மருத்துவமனையைத் தோற்றுவிக்க ரூ.40.60 இலட்சம் நிதி முதலாம் ஆண்டுக்குத் தேவைப்படும். பிறகு ஆண்டுக்கு ரூ.30.20 இலட்சம் நிதி தொடர் செலவினங்களுக்குத் தேவைப்படும் என்பதால் கால்நடை மருத்துவமனையைத் தரம் உயர்த்திட அங்கே சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, மடத்துக்குளம் சட்டப் பேரவைத் தொகுதியில் கால்நடை மருத்துவக் கல்லூரி தேவை என்று சொல்லியிருக்கின்றார்கள். ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்க வேண்டுமென்று சொன்னால், குறைந்தது 30 ஏக்கர் நிலம் இருத்தல் வேண்டும். அதேபோல, 15 கால்நடை துறைகள் இருக்க வேண்டும், கால்நடை பண்ணை இருக்க வேண்டும்; கால்நடை மருத்துவமனை இருக்க வேண்டும்; ஒரு நடமாடும் கால்நடை

மருந்தகம் அமைக்கப்பட்டு, குறைந்தது 8 கிலோ மீட்டர் சுற்றளவில் சேவை செய்ய வேண்டும். மாணவர்களுக்கு விளையாட்டுத் திடல் மற்றும் அரங்கம் அமைத்திட வசதி வேண்டும். ஆண்கள் மற்றும் பெண்களுக்கென தனித்தனி விடுதி, சிற்றுண்டி மற்றும் நூலக வசதி அமைக்கப்பட வேண்டும். இவ்வசதிகளெல்லாம் அமைக்கப்பட்டிருந்தால், Veterinary Council of India, New Delhi-யிலிருந்து 3 நபர்களைக் கொண்ட குழு வந்து பார்வையிட்ட பின்புதான், ஒப்புதல் அளிக்க முடியும். ஆகவே, மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தவரை, அது என்னுடைய திருப்பூர் மாவட்டத்தில் இருக்கின்றது. மடத்துக்குளம் தொகுதியிலே இதுபோன்ற வசதிகளெல்லாம் இல்லாததால், அங்கே கால்நடை மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கு வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல, கடந்த முறை முதலமைச்சராக மாண்புமிகு அம்மா அவர்கள் இருந்த காலத்திலே, ஒரத்தநாடு மற்றும் திருநெல்வேலியில் கால்நடை மருத்துவக் கல்லூரியை அமைத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தக் கல்லூரியினுடைய புனரமைப்பு மற்றும் கட்டட வசதிக்காக ஏற்கெனவே 28 கோடி ரூபாய் கொடுத்திருக்கின்றார்கள். ஆகவே, மடத்துக்குளத்திற்கு அருகிலே இருக்கக்கூடிய நாமக்கல் மாவட்டத்தில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரியில் 80 மாணாக்கர்கள் சேர்வதற்கு வசதியாகவும், அதேபோல தமிழகத்திலே இருக்கின்ற 3 கல்லூரிகளாகிய திருநெல்வேலியிலே 80 மாணாக்கர்களையும், சென்னையிலே 120 மாணாக்கர்களையும், ஒரத்தநாட்டில் 80 மாணாக்கர்களையும் சேர்க்கின்ற வசதியும் இருக்கின்ற காரணத்தினால், தற்போது கால்நடை மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. அந்தக் கல்லூரிகளில் இருக்கின்ற மாணவர்களுக்கு நாம் தேவையான கட்டமைப்புகளைச் செய்துகொண்டிருக்கிறோம் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 118, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.